

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2012- 2013)

(பதினான்காவது பேரவை)

இருபத்தைந்தாவது அறிக்கை

23–1–2013 ஆம் நாளன்று தேனி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 8.MAY 2013)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு
(2012- 2013)

(பதினான்காவது பேரவை)

இருபத்தைந்தாவது அறிக்கை

23–1–2013 ஆம் நாளன்று தேனி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

11-441—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

	பக்கங்கள்
1. 2012–2013 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் அமைப்பு ..	iii
2. அறிக்கை—	v-vi
இணைப்பு-I	1–12
இணைப்பு-II	15–43
இணைப்பு-III	47–55




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2012–2013)

(பதினான்காவது பேரவை)

(2012–ஆம் ஆண்டு மே திங்கள் 19–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)

தலைவர்

*1. திரு. ஆர். மனோகரன்
அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

**2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. கே. உலகநாதன்
4. திரு. பா. கணேசன்
5. திரு. ஆர்.என். கிட்டுசாமி
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. கே. பொன்னுசாமி
8. திரு. ஆ. ராமசாமி
9. திரு. டி.ஆர்.பி. ராஜா
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. அ. அய்யன் பெருமாள்	..	சார்புச் செயலாளர்.

---

* தி ரு. ப. மோகன் 5–10–2012 வரை, முனைவர் வைகைச்செல்வன் 22–10–2012 முதல் 28–2–2013 முற்பகல் வரை, திரு. ஆர். மனோகரன். 5–03–2013 முதல்

** 25–3–2013 முதல் ஆறுமாத காலத்திற்கு பேரவை நடவடிக்கைகளிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2012–2013)

(பதினான்காவது பேரவை)

இருபத்தைந்தாவது அறிக்கை

முன்னுரை

2012-2013-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

தேனி மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 23–1–2013 ஆம் நாளன்று அம்மாவட்டத்தில் குழுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 88 மனுக்கள் தேனி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றின் மீது அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 54 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2013-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாளன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், தேனி மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதில்அளித்தனர். மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 54 மனுக்களை குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 12 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 32 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறையின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பட்டன. மீதமுள்ள 10 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகள் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

19–4–2013ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை 600 009,
18–4–2013,
விஜய சித்திரை திங்கள் 5ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2044.

ஆர். மனோகரன்,
தலைவர், மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	400	கிராமப் பொதுமக்கள், (காவேரி பெண்கள் சங்கம்) பண்ணைத்தோப்பு, போடி நாயக்கனூர், தேனிமாவட்டம்.	போடி வட்டம், பண்ணைத்தோப்பு கிராமம் மற்றும் சாலிமரத்துப்பட்டிக்கு பேருந்து வசதி வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராமம் ஊராட்சி), ஊராட்சி ஒன்றியம், போடி அவர்களது அறிக்கையின்படி தேனி–போடி தடத்தில் பண்ணைத்தோப்பு பிரிவு சாலையில் திரும்பும் இடத்தில் வலதுபுறம் தடுப்புச்சுவரும், பண்ணைத்தோப்பு பிரிவிலிருந்து 0.6 கி.மீ. தொலைவில் ஒரு குறுகலான "ட" வளைவும் (பேருந்துகள் திரும்ப முடியாத), மேலும் பண்ணைத்தோப்பு பிரிவிலிருந்து 1.6 கி.மீ. தொலைவில் உள்ள பண்ணைத்தோப்பு வழிய கிராமத்தின் சாலையின் இரு புறமும் 30 அடி தூரத்திற்குள் எதிரெதிராக இரண்டு பெரிய புளியமரம் உள்ளதாலும், பேருந்து இயக்க இயலாத நிலையுள்ளது. [பொது மேலாளர், தஅபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடித எண் வணிகம்/திவ/994, நாள்: 29–12–2012.]	மனுதாரர் கோரியுள்ள இடத்திற்கு பேருந்து வசதி செய்து தர கூட்டு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	406	திரு. பி. காமலு பொம்மையா, மலையாண்டி நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டிவட்டம், தேனிமாவட்டம்.	தேனி–மதுரை நெடுஞ்சாலையிலிருந்து, க.விலக்கிலிருந்து ஜி.கல்லுப்பட்டி மலையாண்டிநாயக்கன்பட்டி, காிசல்பட்டி வழியாக பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி அவர்களின் அறிக்கையின்படி மதுரை பிரதான சாலையிலிருந்து காிசல்பட்டி வரை (1.5 கி.மீ.) எட்டு இடங்களில் குறுகலான வளைவுகளும், இரண்டு "டீ" பெண்டு வளைவுகளும் உள்ளது. இச்சாலையானது 3 மீட்டர் முதல் 3.4 மீ. வரையிலும் அகலமான சாலையாக உள்ளது. எதிர் திசையிலிருந்து நான்கு சக்கர வாகனங்கள் வரும் பொழுது விலக இயலாத சாலையாக உள்ளது. மேலும், சாலையின் இருபுறமும் பட்டா நிலங்களாக உள்ளது.

மேலும், ஆசாரிப்பட்டி பிரிவு முதல் மலையாண்டி நாயக்கன்பட்டி வரை ஊருக்கு வடப்பக்கம் 200 மீட்டர் மெட்டல் சாலையாக உள்ளது. இச்சாலையிலே பிராதுக்காரன்பட்டி பிரிவிலிருந்து ஜி.கல்லுப்பட்டி வரை குறுகலாக உள்ளதால் பேருந்து இயக்க முடியாத நிலையுள்ளது.

மேலும், மூன்று மினிப் பேருந்துகள் ஆண்டிப்பட்டி–நல்லமுடிப்பட்டி வழி காிசல்பட்டி, மலையாண்டிநாயக்கன்பட்டி, ரோசனப்பட்டி வழியாக 54 தனிநடைகள் இயக்குவதற்கு உரிமம் பெறப்பட்டு இயக்கப்படாமல் உள்ளதை உரிமப்படி இயக்கப்படும் பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை நிறைவு பெறும்.

[பொது மேலாளர், தஅபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மாவட்டம் அவர்களின் கடித எண் வணிகம்/திவ/995/2012 நாள்: 29–12–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

உரிமம் பெறப்பட்டு இயக்கப்படாமல் உள்ள சிற்றுந்துகளை இயக்க வட்டார போக்குவரத்து அலுவலர் உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	408	திரு. என். கனி, தலைவர், கதிர்நரசிங்காபுரம் உழவர் மன்றம், இராஜதானிக்கோட்டை அஞ்சல், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனிமாவட்டம்.	தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, இராஜதானி கிராமத்தில் சர்வே எண் 50 மற்றும் 60ல் நாகலாறு ஆற்றைக் கற்றி 70 கிணறுகள் மற்றும் 300 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் இரண்டு தடுப்பணைகள் கட்ட வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, இராஜதானி கிராமத்தில் சர்வே எண் 50 மற்றும் 60-ல் நாகலாறு ஆற்றைக் சுற்றி 70 கிணறுகள் மற்றும் 300 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் தடுப்பணை கட்ட ஆய்வு செய்து, ரூ. 33.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து. பொ.ப.து. மதுரை மண்டலம், மதுரை அவர்களால் கடித எண் OT2/AE4/10171/நாள் 22-08-2012ன்படி அரசுக்கு பரிந்துரை செய்து, அரசின் பரிசீலனையில் உள்ளது. நடப்பு நிதியாண்டில், செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். [செயற்பொறியாளர், பொதுப்பு/நீ.ஆ.து. மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களின் கடித எண் 455எம்/இவ.அ3/கோ.5/2012, நாள்: 29-11-2012.]	தடுப்பணைகள் கட்டும் பணியை நடப்பு நிதி ஆண்டில் செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	429	எம். பழனியப்பன் மற்றும் பொதுமக்கள் 30–வது வார்டு, அம்மாகுளம் எண் 1 போடிநாயக்கனூர்.	சாலை வசதி மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இந்த அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் 32 மனைகள் அடங்கியுள்ளன. மேற்படி மனைபிரிவுகளை அங்கீகாரம் அளிக்க அரசாணை எண் 59, நாள் 25–07–2006ல் சதுரடிக்கு ரூ. 2 வீதம் செலுத்திட நகராட்சி மூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்பகுதியில் உள்ளமனை உரிமைதாரர்கள் சதுரடிக்கு ரூ. 2/– செலுத்தி மனைபிரிவினை அங்கீகாரம் பெற முன் வரவில்லை. தற்சமயம் மேற்படி பகுதியில் சாலை மற்றும் வடிகால் வசதியினை நகராட்சி நிதியில் செய்ய இயலாததால், தன்னிறைவு திட்டத்தின்மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2012–2013ம் நிதியாண்டிற்குள் இப்பணி செய்து முடிக்க நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [ஆணையாளர், போடிநாயக்கனூர் நகராட்சி அவர்களின் கடித எண் 6019/2011/இ1, நாள்: 28–12–2012.]	பணியை முடிக்க அவ்விடத்திற்கு நேரடியாக சென்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர், போடிநாயக்கனூர் நகராட்சி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	445	திரு. கே. கோபாலகிருஷ்ணன், வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக், பெரியகுளம்.	கும்பக்கரை நீர்வீழ்ச்சியின் பள்ளத்தை சரிசெய்து சுற்றுலாத்தலமாக சீர்செய்யக் கேட்டல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கும்பக்கரை நீர்வீழ்ச்சியின் பள்ளத்தை சரி செய்திடவும் பாதுகாப்பு செய்திடவும் நிதி கேட்டு மாவட்ட வன அலுவலர் கொடைக்கானல் அவர்களால் மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி அவர்களுக்கு இவ்வலுவலக எண்.130/2007 நாள் 30–11–2012–ல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி கிடைத்தவுடன் மனுவில் கேட்டுள்ள பணிகள் விரைந்து முடிக்கப்படும். (மாவட்ட வன அலுவலர், கொடைக்கானல் கோட்டம், கொடைக்கானல் அவர்களின் கடித எண் ந.க.எண். 130/2007/கு, நாள்: 30–11–2012.)	இப்பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	451	திரு. L. நல்லுச்சாமி, நடுப்புரவு கிராம விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், வடகரை, கீழவடகரை, பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.	பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், கீழவடகரை பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட அழகுப்பாறை ஆணைக்கால் (பம்பாற்றுக்கால்) மராமத்துப் பணிகள் செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், கீழவடகரை பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட அழகுப்பாறை அணைக்கால் (பாம்பாற்றுக்கால்) மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ. 22.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, கண்காணிப்புப் பொறியாளர், நீ.ஆ.து/பொ.து, பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை அவர்களுக்கு க.எண் 1071SE/இவ.அ3/கோ.5/2012, நாள் 29–11–2012ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். (செயற்பொறியாளர், பொ.து/நீ.ஆ.து, மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களின் கடித எண் 445எம்/இவ.அ3/கோ.5/2012, நாள்: 29–11–2012.)	இப்பணியை விரைந்து செய்து முடிக்க செயற் பொறியாளர், பொ.து/நீ.ஆ.து, மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	462	திரு. A.S. ராஜாங்கம் ஏரியா செயலாளர், தோழர் உசேன் மீர் நினைவகம், களிமேட்டுப்பட்டி, உத்தமபாளையம், தேனி மாவட்டம்.	தேவாரம்–சாக்குலத்துமெட்டு இணைப்பு சாலை அமைக்க கோருதல்.

(5)

இச்சாலை பாதுகாக்கப்பட்ட வன நிலத்தில் செல்கிறது. மாவட்ட வன அலுவலர், தேனி அவர்கள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை அலுவலர்) சென்னை அவர்களுக்கு ந.க.எண் 15336/20140/வ–2, நாள்: 17–11–2010ல் நெடுஞ்சாலைத்துறை மூலம் வனநிலத்தில் சாலை அமைப்பதற்கான தள ஆய்வு செய்வதற்கும், திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும், அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளார்கள்.

அதன் பின்பு மாவட்ட வன அலுவலர், தேனி வனகோட்டம், ந.க.எண் 15336/2010/வ.2, நாள்: 11–07–2011 மூலம் தள ஆய்வு செய்யவும், திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் நிதி நெடுஞ்சாலைத்துறை மூலம்தான் செலவு செய்திட உறுதி கேட்டும், தளஆய்வின் போது மரங்கள் வெட்டப்படுமா? என்றும் கேட்கப்பட்டது.

சாலை ஆய்வு செய்வதற்கு, நெடுஞ்சாலைத்துறை மூலம் நிதி செலவு செய்யப்படும் என்றும், ஆய்வுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகள் மட்டும் வெட்டி அப்புறப்படுத்தப்படும் என்றும் மாவட்ட வன அலுவலர் தேனிக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 290–1/2011/இவ.அ–3/ நாள்: 19–07–2011–ன் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து சாக்குளத்துமெட்டு சாலை அமைக்க வனநிலத்தில் தள ஆய்வு மேற்கொள்ள முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களிடமிருந்து அனுமதி பெறும் பொருட்டு, மாவட்ட வன அலுவலர் தேனி அவர்கள் மூலம் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை அவர்களுக்கு தொடர்ந்து கடிதம் மூலம் அனுமதி பெறும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் மாவட்ட வன அலுவலகத்திற்கு 28–12–2012 நேரில் சென்று அறியப்பட்டது.

(கோட்டப்பொறியாளர், (நெ) க(ம)ப தேனி அவர்களின் கடிதம் ந.க.எண் 290–1/2011/இவ.அ–3, நாள்: 25–08–2011)

(6)

தேவாரம்–சாக்குலத்துமெட்டு இணைப்பு சாலைப்பணியை வனத்துறையுடன் சேர்ந்து கூட்டு ஆய்வினை மேற்கொண்டு விரைவில் முடிக்க கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, தேனி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	483	பொதுமக்கள், செளமியா சிவாஜி நகர், 24–வது வார்டு, 3வது தெரு, பைபாஸ் ரோடு, தேனி.	வார்டு 24, சிவாஜி நகர் 3வது தெருவில் மழைநீர் வடிகால் அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இந்நகராட்சி வார்டு எண் 24ல் உள்ள சிவாஜி நகர் பகுதியானது வால்கரட்டின் கிழக்குப் பக்கம் உள்ள தாழ்வான பகுதியாகும். அதனைச் சார்ந்துள்ள கே.ஆர்.ஆர். நகர் பகுதியும், சிவாஜி நகர் பகுதியும் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் நிறைந்த பஞ்சமி நிலப்பகுதிக்குள் உள்ளது. மேற்படி சிவாஜி நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அணுகுபாதை மழைப் பகுதியின் தாழ்வான பகுதியில் உள்ளது. சிவாஜி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி அமைக்கப்பட்டு கழிநீர் தொட்டியில் சேகரிக்கப்பட்டு மோட்டார் மூலம் பம்ப்பிங் செய்து வெளியேற்றப்படுகிறது. (ஆணையாளர், (பொ)க்காக, தேனி–அல்லிநகரம் நகராட்சி அவர்களின், கடித எண் 77/2012/இ1, நாள்: 28–12–2012)	மனுதாரர் குறிப்பிட்டுள்ள மழைநீர் வடிகால் பணியை விரைவில் முடிக்க ஆணையாளர், தேனி–அல்லிநகரம் நகராட்சி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	869	திரு. கே. கன்னபராஜ், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை, கே.டி.கே.ஜின்னிங் பேக்டரி, மதுரைரோடு, தேனி.	தேனி பகுதிகளுக்கு 5 நாட்களுக்குள் ஒரு முறை மற்றும் 15 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தேனி ஆற்று பகுதியில் சாக்கடை கலக்கிறது. குடிநீர் நிரந்தர தீர்வாக லோயர் கேம்பிலிருந்து தண்ணீர் எடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தேனி–அல்லிநகரம் நகராட்சி பகுதிகளுக்கு பழனிசெட்டிபட்டி நீரேற்று நிலையம், குன்னூர் ஆற்றுப்படுகையில் உறை கிணறு குடிநீர் திட்டம் மற்றும் வீரப்ப அய்யனார் கோவில் திறந்த வெளி கிணறு குடிநீர் திட்டம் மூலம் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட உரிய முறையில் குளோரின் கலந்து குடிநீர் 3 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேலும் குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு வைகை அணையின் எடுப்பணையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்து குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் பயனுக்கு விரைவில் வரும்பட்சத்தில் தினசரி குடிநீர் வழங்கப்படும். (ஆணையாளர், (பொ)க்காக, தேனி அல்லிநகரம் நகராட்சி, அவர்களின் கடித எண் 5910/2011/இ2, நாள்: 28–12–2012.)	பணியினை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	5558	திரு. ஹாஜி முஸ்தபா, (ஊர் பொதுமக்கள் சார்பாக) பொம்மிநாயக்கன்பட்டி, பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.	பெரியகுளத்திலிருந்து பொம்மிநாயக்கன்பட்டி வழியாக தேவதானப்பட்டி அல்லது வத்தலக்குண்டுக்கு கூடுதல் பேருந்து வசதி செய்துதர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
அரசு பேருந்துகள் மூலம் பெரியகுளத்திலிருந்து பொம்மிநாயக்கன்பட்டி வழியாக தேவதானப்பட்டிக்கு 8 தனிநடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் பெரியகுளம்–தேவதானப்பட்டி வழி பொம்மிநாயக்கன்பட்டி தடத்தில் 16 தனிநடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதிகளே போதுமானதாகும். மேலும், தற்போது அரசு பேருந்துகள் அனைத்தும் பல்வழித்தடங்களில் கால நேரம் நிர்ணயம் செய்து குறுகிய கால இடைவெளியில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்பொழுதுள்ள பேருந்து வசதியினையே பயன்படுத்திக் கொள்ளலாம். (பொது மேலாளர், தஅபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடிதம் எண் வணிகம்/திவ/668, நாள்: 9–11–2012.)	இப்பணி குறித்து நேரடியாக சென்று ஆய்வு செய்து பொதுமக்களிடம் கலந்துபேசி நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவத்துக் கழகம், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	5563	திரு. K.P.S. பாட்ஷா செயலாளர், C/o. கர்னல் பென்னிகுக் கிராமநல பேரவை, அப்பிபட்டி அஞ்சல், உத்தமபாளையம்–தாலுகா, தேனி மாவட்டம்.	சின்னமனூர் முதல் அப்பிபட்டி வழியாக எரசை, பூசாரிகவுண்டன்பட்டி மற்றும் ஆணைமலையன்பட்டி வரை ஒரு வழிச்சாலையை இருவழிச்சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது கீழ்கண்டவாறு தேனி நெடுஞ்சாலைத்துறை, கோட்டத்தின் மூலம் மாவட்ட இதர சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அவை.

1. சின்னமனூர்–எரசக்கநாயக்கனூர் சாலை கி.மீ 0/8–7/4 ஸ்ரீ 6.6 கி.மீ.

2. சின்னமனூர் A அழகாபுரி (அப்பிபட்டி) சாலை கி.மீ 0/0–4/2=4.2 கி.மீ.

3. ஆணைமலையான்பட்டி மூர்த்திநாயக்கன்பட்டி சாலை கி.மீ 0/0– 13/065=13.065 கி.மீ.

இதில் சின்னமனூர்–A. அழகாபுரி (அப்பிபட்டி) சாலையானது சின்னமனூர்–எரசக்கநாயக்கனூர் சாலை கி.மீ 1/6 ல் பிரிந்து ஆணைமலையான்பட்டி – மூர்த்திநாயக்கன்பட்டி சாலை கி.மீ. 9/6ல் சேர்கிறது. அதை தொடர்ந்து எரசக்கநாயக்கனூர், சின்னஒவலாபுரம் (பூசாரிகவுண்டன்பட்டி) வழியாக ஆணைமலையான்பட்டிக்கு சாலை செல்கிறது. இவை அணைத்தும் மாவட்ட இதர சாலையாக ஒருவழித்தடம் கொண்டதாக நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் சின்னமனூர்–A. அழகாபுரி (அப்பிபட்டி) சாலை கி.மீ. 0/0–4/2 வரை ஒருவழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக சாலையை அகலப்படுத்தும் பணி மற்றும் இதிலுள்ள ஐந்து (5) சிறு பாலங்கள் திரும்பக்கட்டுதல் பணி உட்பட ரூ. 110.00 இலட்சங்களுக்கு (ரூபாய் நூற்றி பத்து இலட்சங்கள் மட்டும்) மதிப்பீடு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) 2012–13–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டு 15–11–2012ல் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை

(6)

இப்பணியை வரும் நிதியாண்டில் செய்து முடிக்க கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, தேனி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(5)

எனவே, இப்பணியானது நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். மேலும், எஞ்சிய சாலைகள் அகலப்படுத்தும் பணியானது, அதன் போக்குவரத்து நெரிவுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) 2013-14-ல் மேற்கொள்வதற்கு பிரேரணை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இப்பணியினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை கo(மo)ப தேனி, அவர்களின் நo.க. எண் 39/2012/இவஅ2/ நாள் 01-11-2012.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	6038	திருமதி சுதா கோபிக்கண்ணன், காமாட்சிபுரம், பெரியகுளம், தேனிமாவட்டம்.	பெரியகுளம்-வத்தலக்குண்டு தடத்தில் அமைந்துள்ள அரசு தோட்டக்கலை கல்லூரி முன்பாக அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திண்டுக்கல் மண்டல பேருந்துகள் மூலம் அரசு தோட்டக்கலை கல்லூரி வழியாக இயக்கப்படும் பேருந்துகள் கல்லூரி முன்பாக நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. இருப்பினும் மீண்டும் அனைத்து பேருந்துகளையும் கல்லூரி முன்பாக நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிக் செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(பொது மேலாளர், தஅபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடித எண் வணிகம்/திவ/745, நாள்: 11-2012.)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிய பேருந்து வசதிக்கான இடத்திற்கு சென்று ஆய்வு செய்து, கல்லூரி நிர்வாகத்திடம் கலந்துபேசி முடிவெடுத்து பேருந்தினை இயக்க பொதுமேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவுசெய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண் முகவரியும்.	மனுதாரரின் பெயரும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	399	ஒய்வு பெற்ற அலுவலர் நலச்சங்கம், காமயகவுண்டன்பட்டி, தேனிமாவட்டம் – 625 521.	பொது கழிப்பிடம், பயணியர் நிழற்குடை அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2013–2014ம் நிதியாண்டில் பேரூராட்சி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுநிதி திட்டத்தின்கீழ் பொதுக்கழிப்பிடம் மற்றும் பயணியர் நிழற்குடை அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [செயல் அலுவலர், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம் அவர்களின் ந.க. எண் 295/2012 நாள்: 23–11–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவுசெய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	404	திரு. V.P. ஈஸ்வரன், மாவட்ட மீனவரணி, இணைச்செயலாளர், பெருமாள்கவுண்டன்பட்டி.	பெருமாள்கவுண்டன்பட்டி ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுதல் மற்றும் மகளிர் ரேசன்கடை பின்புறமாக மெயின்ரோடுக்கு இணைப்பு சாலை வசதி செய்து தரக்கேட்டல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சமுதாயக்கூடம் ரூ. 16.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் பணிமேற்கொள்ள போதிய நிதி இருப்பு இன்மையால் வரும் நிதியாண்டில் 2012–13, 2013–14ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அவர்களது பரிந்துரை பெற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், போடிநாயக்கனூர் அவர்களின் கடித எண் 116/2012/அ6)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	405	திரு. எஸ்.கே. முருகேசன், த/பெ. கெப்பனன், க.எண் 11–3–40, இராயர் குல 1வது தெரு, மேலப்பட்டி, ஒடைப்பட்டி அஞ்சல், உத்தமபாளையம் தாலுகா, தேனிமாவட்டம்–625 540.	ஒடைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் சுகாதாரம் பேணுதல் மற்றும் மருத்துவர்கள், பெண் மருத்துவர் நியமனம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
ஒடைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சுற்றிலும் உள்ளாட்சி அமைப்பின் உதவியுடன் சுத்தப்படுத்தி சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது. 19–09–2011 முதல் பெண் மருத்துவர் மரு. மாதரி நியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். ஒடைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண் மருத்துவர் 2 நபர்களும், பெண் மருத்துவர் 1 நபரும் நடமாடும் மருத்துவக்குழுவில் 1 பெண் மருத்துவரும் தற்போது நிரந்தரப்பணியில் இருந்து வருகிறார்கள். [துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், தேனி அவர்களின் கடித எண் 4725/அ2/2011 நாள்: 16–09–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் கருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
4	417	திரு. எஸ். ராதாகிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர், எரசக்கநாயக்கனூர், தேனி மாவட்டம்.	தேனி மாவட்டம் –சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் – எரசக்கநாயக்கனூரில் ரைஸ்மில் முதல் அப்பா சாமி கோவில் வரை 6 கிலோ மீட்டரில் 4 கிலோ மீட்டரில் சாலை போடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 2 கிலோ மீட்டர் தார் சாலை வசதி செய்து தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் செல்வப்பன் ரைஸ்மில் முதல் அப்பாசாமி கோவில் வரை உள்ள 6 கிலோ மீட்டர் சாலையில் 4 கிலோ மீட்டர் ஏற்கனவே தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 2 கிலோமீட்டர் சாலையை 2013–2014ம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் தார்ச்சாலை போட முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செய்யப்படும். (திட்ட இயக்குநர், (பெ) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி அவர்களின் கடித எண் 476/2011/தி2, நாள்: 7–12–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	418	ஊர்பொது மக்கள் சேவாநிலையம், இராஜதானி அஞ்சல், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனிமாவட்டம்.	மயானத்திற்கு சாலை வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மயானத்திற்கு பாதை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. [ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி அவர்களின் கடித எண் 45/2012/அ6, நாள்: 28–11–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	421	S.M. சுப்பையா, செயலாளர், மாவட்ட தலைமை அம்பேத்கார் நற்பணி மன்றம், அம்பேத்கார் காலனி, லோயர்கேம்ப், கூடலூர்.	சமுதாய கூட கட்டிடம் இடிந்து பயன்பாடின்றி இருப்பது–அடிப்படை வசதி செய்து புதிய கட்டிடம் கட்டி மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வார்டு எண் 21ல் அம்பேத்கார் காலனியில் உள்ள **சமுதாயக் கூடத்தை இடித்து விட்டு புதியதாக** சமுதாயக் கூடம் அமைக்க **ரூ.14.00 இலட்சத்திற்கு மதிப்பீடு** தயார் செய்து மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [ஆணையாளர், கூடலூர் நகராட்சி அவர்களின் கடித எண் 1998/2012/ அ1, நாள்: 30–11–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	426	கிராம மக்கள் முன்னேற்ற இளைஞர் சங்கம், 52, கிழக்குத் தெரு, குன்னூர், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனிமாவட்டம்.	குன்னூர் கிராமத்திற்கு பேருந்து நிழற்குடை அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2013–2014ம் நிதியாண்டில் நிதி வரப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். [ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி அவர்களின் கடித எண் 45/12/அ6, நாள்: 28–11–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	430	தலைவர் ஆண்டிபட்டி அனைத்து வியாபாரிகள் சங்கம், 93, பஜார்தெரு, ஆண்டிபட்டி.	ஆண்டிபட்டி–சேடபட்டி கூட்டு குடிநீர் ஆண்டிபட்டி நகர் பகுதிகளுக்கும் விநியோகிக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஆண்டிபட்டி பேரூராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் ஆண்டிபட்டி–சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பற்றாக்குறைக்கு மட்டும் அரப்படித்தேவன்பட்டி தலைமை நீரேற்று நிலைய மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2012–2013 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 15.00 லட்சம் மதிப்பீட்டில் சக்கம்பட்டி பொட்டக்குளத்தில் கூடுதல் தொட்டி அமைத்து பைப்லைன் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவுற்றவுடன் பேரூராட்சி அனைத்து பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். (செயல் அலுவலர் ஆண்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம் அவர்களின் கடித எண் 14/2012, நாள்: 7–12–2012),	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	431	ஆண்டிபட்டி அனைத்து வியாபாரிகள் சங்கம், 93, பஜார் தெரு,ஆண்டிபட்டி–625 512.	ஆண்டிபட்டியிலிருந்து மதுரைக்கு நேரடி பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தேனி–மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஆண்டிபட்டி வழியாக 5 நிமிட இடைவெளியில் குமுளி, கம்பம் மற்றும் மூணாறு ஆகிய பகுதிகளிலிருந்து மதுரைக்கு அரசு பேருந்துகள் மூலம் 408 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இதே பகுதிகளில் தனியார் பேருந்துகள் மூலம் 174 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே ஆண்டிபட்டியிலிருந்து மதுரைக்கு தற்போதைய தேவைக்கு ஏற்ப போதுமான பேருந்து வசதிகள் உள்ளது.

[மேலாண் இயக்குநர், த.நா.அ.போ.கழகம்(மதுரை) லிமிடெட், மதுரை அவர்களின் கடிதம் எண் CCO/GG/140–2/2012 நாள்: 3–12–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	435	திருமதி. பி. சித்ரா, க/பெ. சுப்பையா, வார்டு–3, காந்திநகர் பண்ணைப்புரம், உத்தமபாளையம் வட்டம், தேனிமாவட்டம்.	வார்டு–2 மற்றும் 3, காந்திநகர், செல்வநாயகபுரத்தில் ஆதிதிராவிடர், அருந்ததியர் ஏனைய சமூகத்திற்கு பொது கழிப்பிடம் கட்ட கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஆதிதிராவிடர் அருந்ததியினர் மற்றும் ஏனைய சமூதாயத்தினருக்கு வார்டு–2,3 காந்திநகர் மற்றும் செல்வநாயகபுரத்தில் சர்வே எண் 980/2–ல் 1.56 ஏர்ஸ் உள்ள இடத்தில் பொது கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை செய்வதற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டு 2012–2013 நிதியாண்டில் திட்ட பணியில் இப்பணியினை மேற்கொள்வதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு உரிய பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளது. (செயல் அலுவலர், பண்ணைப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	436	திரு மு. பொன்ராம் கவுண்டர் மற்றும் கிராம பொது மக்கள், இராமலிங்கபுரம், ஜி.உசிலம்பட்டி அஞ்சல், ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.	இராமலிங்காபுரம் கிராமம்–திப்புரவு வாய்க்கால் அமைக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

திப்புரவு அணைக்கட்டு திட்டத்தின் முதனிலை சாத்தியக்கூறு அறிக்கை ரூ.17.95 கோடிக்கு 1987–88 ஆம் ஆண்டு விலை விபரப்படி தயாரிக்கப்பட்டு அரசுக்கு தலைமைப்பொறியாளர், திட்டம் உருவாக்கம், சென்னை அவர்களின் க.எண்.பி1/21965/85–19 நாள் 18–11–1987–ல் அனுப்பப்பட்டது.

இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் (0.10:1) குறைவாக உள்ளதாலும் 74 ஏக்கர் வனநிலங்கள் கையகப்படுத்த வேண்டியிருந்தாலும் வெள்ள நிலைமை போதுமானதாக இல்லாததாலும் இத்திட்டத்தைக் கைவிடலாமென அரசுக்கு தலைமைப்பொறியாளர், திட்டம் உருவாக்கம், சென்னை அவர்களின் க.எண்.பி1/53641/91–4 நாள் 10–10–1991–ல் பரிந்துரைக்கப்பட்டது.

இருப்பினும் பொதுமக்களிடமிருந்து மீண்டும், மீண்டும் மனுக்கள் வந்தடியால் இத்திட்டம் 1993ல் மறு ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் திட்டம் சாத்தியமில்லை என கண்டறியப்பட்டு அரசு கடித எண். 6787/பி1/2006–9/ நாள் 27–09–2006ல் திப்பரவு அணை திட்டம் அரசால் கைவிடப்பட்டது.

திப்பரவு அணைக்கட்டு திட்டத்திற்கு பதிலாக மாற்று திட்டத்தின் நிலை :

திப்பரவு அணை வாய்க்கால் திட்டத்திற்கு பதிலாக தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் ஜி. உசிலம்பட்டி பகுதியிலுள்ள கண்மாய்கள்

பயன்பெறும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள நரசிங்கபுரம் அணைக்கட்டிலிருந்து வாய்க்கால் அமைக்கும் திட்டத்திற்கான முதனிலை அறிக்கை ரூ. 29.00 கோடி மதிப்பிற்கு தயாரிக்கப்பட்டு தலைமைப்பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமைப்பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை அவர்கள் மேற்கண்ட திட்டத்திற்கு விரிவான ஆய்வு நடத்தி மதிப்பீடு தயாரிக்க உத்தரவிட்டத்தின்பேரில் விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

நரசிங்கபுரம் அணைக்கட்டிலிருந்து சிறுகுளம், பெரியகுளம், மயிலாடும்பாறை அருகவல்லி ஓடை வரை 5 கி.மீ. வரை வாய்க்காலும், பின்னர் 15 கி.மீ. தூரம் வனப்பகுதி மலைவழியாகவும், கண்டமனூர், ஜி. உசிலம்பட்டி, கதிர்நரசிங்கபுரம் நாகலாறு ஓடை வரை நிலம் வழியாகவும் மொத்தம் 30 கி.மீ. தூரத்திற்கு வாய்க்கால் வெட்டப்பட வேண்டும். இத்திட்டத்திற்காக 35 ஹெக்டேர் பட்டா நிலங்களும் 5 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களும் 45 ஹெக்டேர் வனநிலங்களும் (ஆக மொத்தம் 85 ஹெக்டேர்) கையகப்படுத்த வேண்டியுள்ளது.

வனப்பகுதியில் கால்வாயை 10 மீ முதல் 20 மீ ஆழம் வரை 15 கி.மீ. நீளத்திற்கு கடினப்பாறையில் வெட்ட வேண்டும். மலைகள் சூழ்ந்த பகுதியில் வாய்க்கால் அடிக்கடி தூர்ந்து விடுவதால் பராமரிப்பு செலவு அதிகம் ஆகும்.

தற்போது இந்திய அரசு மலைப்பகுதிகளை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளபடியால் இத்திட்டத்திற்கு வனநிலங்களை கையகப்படுத்த இயலாது. நில உரிமையாளர்களிடம் பட்டா நிலங்களை கையகப்படுத்த சம்மதக்கடிதம் பெறுவதும் கடினமானதாகும்.

வைகை ஆற்றில் போதிய நீர் பெருக்கு இல்லாத காரணத்தினால் இத்திட்டத்திற்கு குறைந்த நம்பகத்தன்மையே உள்ளது.

இத்திட்டத்தினால் பயன்பெறும் பிற கண்மாய்களான ஆண்டிபட்டி கண்மாய், ஆசாரிபட்டி கண்மாய், சக்கிலிச்சிகுளம், நல்லிடைச்சேரி, ஜம்புலிபுத்தூர் ஆகியவற்றுக்கு நாகலாறு ஓடை மூலமாக பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

22. உசிலம்பட்டி கண்மாய்க்கு விருமானூத்து ஓடை மற்றும் நாகலாறு மூலமாக பாசனவசதி அளிக்கப்பட்டு வருகிறது.

வைகை ஆற்றுப்படுகை மட்டத்திலிருந்து ஜி.உசிலம்பட்டி புதுக்குளம் மற்றும் கன்டமனூர் புதுக்குளம் கண்மாய்கள் சுமார் 50 மீ உயரத்தில் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளபடியால் வைகையாற்று நீரை கொண்டு செல்ல மட்ட அளவுகள் சாத்தியக்கூறு இல்லை.

மேலும், இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ரூ. 170 கோடி ஆகும். பயன்பாடு விகிதம் 0.12:1.

எந்த ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் அரசு நிதிவழங்க பயன் செலவு விகிதம் குறைந்த பட்சம் 1:1 என இருக்க வேண்டும். ஆனால் பயன் செலவு விகிதம் இத்திட்டத்திற்கு மிக குறைவாக உள்ளது.

வைகை ஆற்றில் வெள்ள நிலைமை போதுமானதாக இல்லாததாலும், வனநிலங்களை கையகப்படுத்த இயலாததாலும், இத்திட்டத்தினால் பயன்பெறும் பாசன நிலங்கள் அணைக்கட்டு பகுதியிலிருந்து வெகு தொலைவில் உள்ளதாலும், தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறு இல்லாததாலும் பொருளாதார ரீதியிலும் சிக்கனமற்ற திட்டமாக உள்ளதாலும் இத்திட்டத்தை நிறைவேற்றிட சாத்தியமில்லை என கண்டறியப்பட்டது.

எனவே மேற்காணும் திட்டதினை கண்காணிப்புப்பொறியாளர், திட்ட உருவாக்க வட்டம், திருச்சி அவர்கள் தலைமைப்பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை அவர்களுக்கு கடித எண். 85 க. பொ/கோ.47/ இவஅ3/நாள் 24-09-12ல் திட்டத்தை கைவிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களின் கடித எண் கோ. 28/உ.செ.பொ.(தே)/2012/ நாள்: 27-12-2012.)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	437	திரு. டி. வேல்ராஜ் மற்றும் கிராம பொது மக்கள் இராமலிங்காபுரம், ஜி.உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.	இராமலிங்காபுரம் முதல் எட்டப்பராஜபுரம் வரை இணைப்பு சாலை வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2013–2014–ம் நிதி ஆண்டில் நிதி வரப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி அவர்களின் கடித எண் 45/12/அ6, நாள் 31–12–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	439	திருமதி. ஜெ. பவுன்தாய் ஜெயராமன் வரி சீரமைப்பு குழு உறுப்பினர் (ம) 15வது வார்டு கவுன்சிலர் பழனிசெட்டிபட்டி.	முத்துநகருக்கு செல்லும் பாதை தார்ச்சாலையாக அமைத்துத் தரக்கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கும், தமிழ்நாடு மின்சார கழகத்திற்கும் இடையே முத்தூநகருக்கு மக்கள் செல்வதற்கான பாதை பேரூராட்சிக்கு சொந்தமான பாதை இல்லை. மனுதாரர் குறிப்பிட்டுள்ள இப்பாதையில் பேரூராட்சி மூலம் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின் கழகத்திடம் அனுமதி வேண்டி கோரப்பட்டதில் செயற் பொறியாளர், இயக்குதல், தேனி அவர்களின் மூத நாள் 27.12.2012 ன்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்திற்கான 230/110/22KV உபமின் நிலையம் அமைக்கப்பட்டு பழனிசெட்டிபட்டியில் செயல்பட்டு வருகிறது என்றும், மேற்கண்ட மனுதாரர் கோரியுள்ள பாதைக்கான நிலம் மின்கழகத்திற்கு சொந்தமான இடமாக இருப்பதாலும் மின்சார துறையினரால் பாதுகாக்கப்பட்ட இடமாக இருப்பதாலும் சாலை வசதி அமைக்க அனுமதி வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். ஏற்கனவே முத்தூநகருக்கு பொது மக்கள் செல்வதற்கான 20 அடி அகலம் கொண்ட தார்ச்சாலைகள் பேரூராட்சி மூலம் அமைக்கப்பட்டு வடிகால் வசதியும் செய்து தரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(செயல் அலுவலர், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தேனி மாவட்டம்.)

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	442	திரு. ம.பெ.மு. அன்புக்கரன், பி.ஏ., 47, பெரியார் சாலை, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம்.	பெரியகுளம் வடகரை கிளை நூலகம் சொந்தக் கட்டிடத்தில் அமைக்கக் கோருதல்.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	444	திரு. வி. உதயக்குமார், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.	கோம்பை பேரூராட்சியில் மின்மயானம் அமைத்துத் தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை

(5)

பெரியகுளம் நகராட்சி வடகரை வார்டு 1 பிளாக்–12, டி.எஸ்.எண்.1432ல் 5 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்து, நகர்மன்றத் தீர்மான எண்.1128 நாள் 24–6–09–ன் படி தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வாயிலாக அரசின் அனுமதி வேண்டி உரிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைக்கப்பெற்ற உடன் மேல்நடவடிக்கை தொடரப்படும்.

[ஆணையாளர்(பொ), பெரியகுளம் நகராட்சி அவர்களின் ந.க.எண். 1268/2009/எப்1, நாள்: 18–8–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

துறையின் பதிலுரை

(5)

கோம்பை பேரூராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 16090 ஆகும். இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியாக மயானம் உள்ளது. அனைத்து சமுதாயத்திற்கும் ஒட்டுமொத்த மின் மயானம் அமைப்பதற்கு போதிய இடவசதி மற்றும் புறம்போக்கு இடங்கள் ஏதுமில்லை. மேலும் அரசிடமிருந்து இடம் மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில் மின்மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் கோம்பை பேரூராட்சியின் அருகில் 25 கிலோ மீட்டர் தொலைவில் போடிநாயக்கனூர் நகராட்சியில் மின்மயானம் உள்ளது.

(செயல் அலுவலர், கோம்பை பேரூராட்சி, தேனி மாவட்டம்)

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	447	திரு.கே. சுப்பிரமணி 1/225, வடக்குத் தெரு, ஜி. கல்லுப்பட்டி.	தேனி திண்டுக்கல் எல்லைச் சந்திப்பில் உள்ள ஜி. கல்லுப்பட்டி ஊராட்சியில் முத்தாலம்மன் கோவில் பூஞ்சோலைக்கு செல்லும் வழியில் எஞ்சியுள்ள பகுதியில் தார்ச்சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலையில் எஞ்சியுள்ள 200 மீ நீளமுள்ள சாலையை தார்ச்சாலையாக மாற்றுவதற்கு ரூ. 2.75 லட்சத்திற்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் மூலம் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தீர்மானம் எண் 8, நாள் 26-12-2012) (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பெரியகுளம் அவர்களின் கடித எண் ந.க.எண் 3004/2012/அ3, நாள்: 3-12-2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	453	திரு. ஆர். நாராயணசாமி மற்றும் பொதுமக்கள் 22வது பகுதி சேதுபாஸ்கரன் தெரு, போடிநாயக்கனூர்.	சாலை வசதி மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
22வது வார்டு சேதுபாஸ்கரன் தெரு சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி செய்து ரூ. 2.00 இல்டச்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 22–01–2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. மேற்படி பணி 31–03–2013க்குள் முடிக்கப்படும். (ஆணையாளர் போடிநாயக்கனூர் நகராட்சி அவர்களின், கடித எண் 6019/2011/இ1, நாள்: 28–12–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	469	திரு. பி. மாதவன், க.எண்.30ஏ, பாரஸ்ட் ரோடு 10–வது தெரு, தேனி.	தேனி–பெரியகுளம் பைபாஸ் சாலையினை அகலப்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி–பெரியகுளம் பைபாஸ் ரோடு நெடுஞ்சாலை துறையினை சார்ந்தது. மேற்படி சாலை அமைப்பது குறித்து உதவி செயற்பொறியாளர், நெடுஞ்சாலை துறை தேனி அவர்களிடம் கலந்து ஆலோசனை செய்ததில் மேற்படி சாலை விரிவாக்கம் பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவித்துள்ளார்கள். அதற்கான தொழில்நுட்ப அறிக்கையும் பெறப்பட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள நகராட்சி புதிய பேருந்து நிலையம் மட்டுமே நகராட்சியால் கட்டப்பட்டு வரப்படுகிறது. (ஆணையாளர்(பொ)க்காக, தேனி அல்லிநகரம் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண். 5754/2012/எப்1, நாள்: 28–12–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	470	தெய்வீக அறக்கட்டளை, பாரதிநகர், உத்தமபாளையம்.	அருள்மிகு திருக்காளாத்தீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு நரசிங்கப்பெருமாள் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு திருக்காளாத்தீஸ்வரர் மற்றும் நரசிங்கப்பெருமாள் திருக்கோயில் இந்துசமய அறநிலையச்சட்டப்பிரிவு 46(னை)ன் கீழ் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் கம்பம் அருள்மிகு கம்பராயப்பெருமாள் திருக்கோயில் கம்பம் அருள்மிகு கம்பராயப்பெருமாள் திருக்கோயிலை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அருள்மிகு திருக்காளாத்தீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு நரசிங்கப்பெருமாள் திருக்கோயில் செயல்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று நீண்டகாலங்களாகிவிட்டபடியால், திருப்பணி வேலைகள் செய்ய நகர மக்களால் முடிவு செய்யப்பட்டு, அதன் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு மதுரை இந்துசமய அறநிலைய இணை ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இலாகாப் பொறியாளர்களால் திருப்பணி ரூ.34,40,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாகரும் பெறப்பட்டு திருப்பணி வேலைநடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

திருக்கோயில் திருப்பணி மதிப்பீட்டுத்தொகையான ரூ.34,40,000/–ம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பொதுநல நிதியாக ரூ.10,00,000/–மும் மீதம் ரூ.24,40,000/–மும் பொதுமக்களிடம் நன்கொடையாகவும் பெறுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திருப்பணி வேலைகள் தொடங்க இருந்த நிலையில், மேற்படி திருப்பணிக்குழு அரசு உத்தரவுப்படி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருப்பணி வேலை தொடர்ந்து செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது.

துறையின் பதிலுரை–தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்படி கால இடைவெளியில் இலாகா அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டைக் காட்டிலும், திருப்பணி மதிப்பீடானது விலைஉயர்வினால் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்படி விலை உயர்வுக்கேற்ப புதிய மறு மதிப்பீடு ரூ.44.50 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டது. மேறபடி தயார் செய்யப்பட்டுள்ள மறு மதிப்பீட்டின்படி திருப்பணி வேலைகள் செய்வதற்கு முதல்கட்டமாக ஆணையர் நலநிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.10,00,000/–க்குக் கொண்டு, திருக்கோயிலில் மகாமண்டபம் கட்டும் திருப்பணிக்கு கடந்த 20–5–2012ம் தேதி டெண்டர் விடப்பட்டு, பணிக்கு சென்னை ஆணையர் அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டு விரைவில் திருப்பணி வேலை துவங்கப்பட உள்ளது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
மேலும் பொதுமக்கள் நன்கொடை பெறுவதற்கு திருப்பணிக்குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.	
(செயல் அலுவலர், அருள்மிகு திருக்காளத்தீஸ்வரர் நரசிங்கப்பெருமாள் திருக்கோவில் உத்தமபாளையம் நகர் மற்றும் வட்டம் தேனி மாவட்டம் அவர்களின் கடித எண் மற்றும் நாள்: 27–11–2012.)	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	471	திரு. ம. முருகையா, பொதுமக்கள் சார்பாக, காந்தி நகர் இரண்டாவது தெரு, அல்லிநகரம், தேனி.	தேனி அல்லிநகரம் காந்தி நகர் 12வது வார்டு 2வது தெருவின் மையத்தில் உள்ள மின்கம்பத்தை அகற்றி ஓரத்தில் அமைத்து தருமாறு தெருவிற்கு வரும் மின்கம்பி அலுமினியத்தால் இல்லாததால் மின் அழுத்தம் குறைந்து விட்டு விட்டு வருவதால் மின்கம்பியை மாற்றி அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி அல்லிநகரம் 12வார்டு இரண்டாவது தெருவின் மையத்தில் போக்குவரத்திற்கு இடையூராக அமைந்துள்ள மின்கம்பத்தை ரோட்டின் ஓரத்தில் மாற்றி அமைக்க ஆணையாளர், தெருமக்களிடம் கழக விதிகளை எடுத்துக் கூறி மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் சட்டனத்தை செலுத்துவதற்கு ஆணையாளர்/தேனி நகராட்சிக்கும் பொது மக்கள் பிரதிநிதியிடமும் சம்மதக்கடிதத்துடன் பதிவுக்கட்டணமும் செலுத்த தாக்கீது வழங்கப்பட்டுள்ளது விண்ணப்பித்தவுடன் மின்கம்பம் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் மேற்கண்ட தெருவில் ACSR 7/3.35 மின்கம்பிகள் மாற்றப்பட்டு சீரான மின்சாரம் 230 Volts வழங்கப்பட்டு வருகிறது. [மேற்பார்வை பொறியாளர், தே.மி.ப.வதேனி அவர்களின் கடித எண் 398/11 ச.ம.பே.செ.(மனு 2) நாள்: 04–8–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	472	திரு. G.M. நாகராஜன், சங்கரலிங்கம்பிள்ளை ஓடைக்கரைத் தெரு, கம்பம்.	மின் மயானம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் 2012–2013–ன் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் மின் மயானம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.2195/பி1/2012/5, 13–12–2012ம் தேசிய கழகத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 24–01–2013 அன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. (ஆணையாளர் கம்பம் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண். 3148/2012/இ1, நாள்: 22–11–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
22	481	திரு. ம.பெ.மு. அன்புக்கரன், பி.ஏ., 47, பெரியார் சாலை, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம்.	1) தேனி மாவட்டம்–பெரியகுளம் வராக நதியில் சாக்கடை கலக்கப்படுவதால் சுத்தம் செய்ய கோருதல். 2) பெரியகுளத்திற்கு குடிநீர்–போ்ச்சத்திலிருந்து வருவதை தனி பைப் லைன் வைத்து சுத்தமாக கிடைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1) வராக நதியில் சாக்கடை நீர் கலக்காமல் இருக்கும்பொருட்டு ரூ.23.00/– கோடிக்கு கருத்துரு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றவுடன், உரிய நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2) தற்போது நகராட்சியில் இப்பொருள் குறித்தான திட்ட நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், இப்பொருள் குறித்து நகர்மன்றத்தின் பார்வைக்கும் கவனத்திற்கும் கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [ஆணையாளர்(பி), பெரியகுளம் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண். 4663/2011/இ1, நாள்: 1–2–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	489	திரு. R. ஞானமூர்த்தி, விவசாய சங்க அமைப்பாளர், காமயகவுண்டன்பட்டி அஞ்சல், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.	காமயகவுண்டன்பட்டி சிறப்பு பேரூராட்சியில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள கேசவபுரம் கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, காமயகவுண்டன்பட்டி கிராமம், கேசவபுரம் கண்மாய் ஆக்கிரமிப்புகள் முற்றிலும் அகற்றப்பட்டு விட்டது. மேலும் இக்கண்மாயில் தூர்வாரி மராமத்துப் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.118.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, கண்காணிப்புப் பொறியாளர், நீ.ஆது/பொபது, பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை அவர்களுக்கு க.எண.107SE/இவஅ3/கோ5/2012 நாள் 29–11–2012–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். (செயற்பொறியாளர், பொபது/நீ.ஆது, மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களின் கடித எண் 455எம்/இவ.அ3/கோ.5/2012, நாள்: 29–11–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
24	494	பொதுமக்கள், வார்டு–27, பாரஸ்ட்ரோடு, தேனி.	வார்டு எண்.27, பாரஸ்ட் ரோடு 6வது குறுக்குத் தெருவில் அடிப்படை வசதிகள் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.27 பாரஸ்ட் ரோடு 6–வது குறுக்குத்தெருவில் ஏழு தெருவிளக்குகள் 2 குடிநீர் பொது குழாய் இணைப்புகள் மற்றும் மினிபவர்பம்ப் உள்ளது. மேற்கண்ட பகுதியில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடைத் திட்டப்பணி முடிவுற்ற பின்பு மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை சீரமைப்பும் மேற்கொள்ளப்படும். (ஆணையாளர்(பொ)க்காக, தேனி அல்லிநகரம் நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண். 77/2012/இ1, நாள்: 28–12–2012.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	496	திரு. எம். தங்கப்பாண்டியன், த.பெ. மருதலிங்கம், மேற்கு தெரு, குன்னூர், தேனி.	தேனி–ஆண்டிப்பட்டி பிரிவில் தேசிய நெடுஞ்சாலையில் தடுப்பு அமைக்கக் கேட்டல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தேனி முதல் ஆண்டிப்பட்டி பிரதான சாலையில் அமைந்துள்ள குன்னூர் பகுதியில் சுமார் 500 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இந்த பிரதான சாலையானது தேசிய நெடுஞ்சாலையில் நீட்சி எண். 49 ஐ சேர்ந்ததாகும். இச்சாலையில் சாலை தடுப்பு (Speed Break) அமைப்பதற்கு தேசிய நெடுஞ்சாலையில் சாலை விதிப்பிரகாரம் சாத்தியமில்லை. விபத்துக்களை தடுக்கும் நோக்கத்தோடு பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் சாலையை கடப்பதற்கு ஏதுவாக (Barricade) தடுப்பு அரண் அமைப்பதற்கு தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் (Barricade) 27.12.2012 ஆம் தேதி முதல் நிறுவப்பட்டுள்ளது. [காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம், தேனி. அவர்களின் கடித எண் சி3/1326/33519/2012, நாள் 28–12–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	5552	திரு. இரா. அழகுமலை, த/பெ. ராமசாமி, 11/W, சபரிமலை தெரு, K.V.N. அபார்ட்மெண்ட், போடிநாயக்கனூர்.	சிலமலை ஊராட்சி, சூலப்புரத்தில் உள்ள (எர்ரம்மாள்) குளத்தினை ஆழப்படுத்தி மழைநீரை தேக்கி வைக்கக் கேட்டல்.

துறையின் பதிலுரை

(5)	குழுவின் குறிப்புரை
சிலமலை ஊராட்சி சூலப்புரம் கண்மாயின் கரையை பலப்படுத்தி குளத்தை ஆழப்படுத்தும் பணிக்கு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2011–12–ம் ஆண்டு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.131/2011/டி.7, நாள் 17–2–11ன்படி முறையே வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் 18.00 மற்றும் 24.30 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ரூ.18.00 லட்சம் மதிப்பீட்டில் உள்ள பணி ஆரம்பிக்கப்பட்டு 18070 மனித சக்தி நாட்களுக்கு ரூ.17.30 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. தற்போது ரூ.24.30 லட்சம் மதிப்பீட்டிலான பணி துவக்கப்பட்டு 3925 மனிதசக்தி நாட்களுக்கு ரூ.3.56 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. (ஆணைவாளர், ஊராட்சி ஒன்றியம், போடிநாயக்கனூர் அவர்களின் கடித எண்.116/2012/அ6, நாள்: 27–12–2012.)	(6) துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
27	5553	திரு. வீரப்பராஜ், தலைவர், தேவேந்திரகுல வேளாளர் உறவின்முறை, தேவாராம், தேனி மாவட்டம்.	தேனி மாவட்டம், தேவாரம் பகுதியில் செயல்படும் டாஸ்மாக் சில்லரை மதுபான விற்பனை கடை எண் 8570 மற்றும் 8571–ஐ இடமாற்றம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1) டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடை எண் 8570 இடமாற்றம் செய்யப்பட்டு விட்டது. 2) 8571 மதுபானக் கடை இடமாற்றம் செய்ய தேவாரம் நகர் 15 வார்டில், கதவு எண் 163/1, பாத்திமா தியேட்டர் ரோடு என்ற முகவரியில் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு இருப்பதால், இப்பணி முடிய இன்னும் 20 தினங்கள் ஆகலாம் என்பதால் மராமத்து பணிகள் நிறைவுற்றவுடன் இப்புதிய இடத்தில் மேற்படி மதுபானக் கடை துவங்கப்படும். [உதவி ஆணையர்(கலால்), தேனி அவர்களின் கடித எண் ந.க.எண். 23582/2012/ப்பி1, நாள் 07–08–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28	5554	நரியூத்து கிராம பொது மக்கள் மற்றும் தென் இந்திய நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலிங், நரியூத்து, கடமலை–மயிலை ஒன்றியம், தேனி.	நரியூத்து கிராமத்தில் 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட 60000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதற்கு பதிலாக புதிய மேல்நிலைத் தொட்டி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தேனி மாவட்டம், கடமலை–மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த நரியூத்து கிராமத்தில் 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட 60000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியின் தூண்கள் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. மேலும் 2003ம் ஆண்டு புதிதாக 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி அமைத்து நல்ல முறையில் இயங்குகிறது. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதிய 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணி ஊராட்சி ஒன்றியம் மூலம் நடைபெறுகிறது. நீர் உறிஞ்சு கிணற்றிலிருந்து புதிய தொட்டிக்கு இணைப்பு வழங்கி திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

(நிர்வாகப் பொறியாளர் தருவாயியம் கிராம குடிநீர்த் திட்ட கோட்டம், என்.ஆர்.டி.நகர்/தேனி அவர்களின், கடித எண் ச.பே.கு.மனு/தருவாயியம்/கிருதி/தேனி/2012, நாள்:05–11–2012.)

குழுவின் பரிந்துரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
29	5555	பெல்லோஷிப் இராம்ஜி பாலாசிங்கியர், (ஊர் பொது மக்கள் சார்பாக), எ.புதுக்கோட்டை, பெரியகுளம், தேனி மாவட்டம்.	பெரியகுளத்திலிருந்து இ.புதுக்கோட்டை, கே.கே. நகர். அண்ணா நகர், பெரியார் நகர், நேரு நகர், கக்கன்ஜி நகர், ஆரோக்கியமாதா நகர், ஜே.கே. நகர், முருகன்மலைக்கு காலை 5.00, 6.00, 8.00, 9.00 மதியம் 1.00, 2.00 மாலை 5.00, 6.00 இரவு 7.00, 9.00 மணிக்கும் பேருந்து வசதி செய்துதர வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

அரசு பேருந்து மூலம் பெரியகுளம்–கும்பக்கரை வழி இடுகுக்கோட்டை, அண்ணா நகர், ஆரோக்கியமாதா நகர் வழித்தடத்தில் காலை 5.45, 6.45, 10.25, மதியம் 13.45, மாலை 16.10, 17.10–க்கும், பெரியகுளம்–முருகன்மலை வழி இடுகுக்கோட்டை, அண்ணாநகர், ஆரோக்கியமாதா நகர், நேரு நகர் வழித்தடத்தில் காலை 5.00, 7.10, 7.25 மதியம் 13.30 மாலை 18.05க்கும் மேற்கண்ட ஊர் பொது மக்கள் பயன்படும் வகையில் இயக்கப்பட்டு வருவதில், மனுதாரர் கோரியுள்ள நேரமான காலை 5.00 மணி, மாலை 5.10 மற்றும் 6.05 மணிக்கும் பேருந்து வசதியுள்ளது.

மேலும், தற்போது அரசு பேருந்துகள் அனைத்தும் பல்வழித்தடங்களில் கால நேரம் நிர்ணயம் செய்து குறுகிய கால இடைவெளியில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகிறது.

எனவே, தற்பொழுதுள்ள பேருந்து வசதியினையே பயன்படுத்திக் கொள்ளலாம். இருப்பினும் 2 நடைகள் இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[பொது மேலாளர், தி.அ.போ.க (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடித எண் வணிகம்/திவ/667, நாள் 9–11–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30	5557	திரு.எம். முதலி, தேனி மாவட்ட செயலாளர், நுகர்வோர் பாதுகாப்பு பெருமன்றம், டொம்புச்சேரி, தேனி மாவட்டம்.	தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், உப்பார்பட்டிக்கும் உப்பார்பட்டிக்கும் இடையில் முல்லை பெரியாற்றின் குறுக்கே புதிதாக பாலம் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
உப்புக்கோட்டைக்கும்–உப்பார்பட்டிக்கும் இடையே முல்லை பெரியாற்றில் பாலம் கட்டிக் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. இவ்வழியாக இருபுறமும் வீடுகள் இருப்பதால் சாலை குறுகலாக உள்ளது. கனரக வாகனம் செல்ல இயலாத நிலையில் இருசக்கர வாகனமான கார், ஈப்பு போன்ற வாகனங்கள் மட்டுமே செல்ல முடியும். மேலும் இதே ஆற்றின் தென்பகுதியில் தற்போது கூழையனூர் – கோட்டூர் இடையே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டி அமைக்க ரூ.360.00 இலட்சத்தில் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. உப்புக்கோட்டைக்கும், கூழையனூருக்கும் இடையே 5 கி.மீ தூரம் உள்ளது. 5 கி.மீ தூரம் உள்ளதால் ஆற்றின் குறுக்கே மேலும் ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. [திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி அவர்களின் கடித எண் ந.க.எண்.476/2011/தி2 நாள்: 6–3–2013,]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	*(2)*	*(3)*	*(4)*
31	5561	திரு.எம். அன்னக்கொடி, த/பெ. முருகமலை, எருமலைநாயக்கன்பட்டி, பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.	எருமலைநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத்தரக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
எருமலைநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் வரும் நிதியாண்டில் அமைக்கப்படும். [தேனி மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) அவர்களின் ந.க. எண் 1789/ஆ1/2012, நாள் 30–10–2012.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
32	5562	திரு. மொ. ஒண்டிவீரன், ஊராட்சி மன்ற உறுப்பினர், 2/74, கலையரங்க தெரு, சிலமலை, போடிநாயக்கனூர்.	சிலமலை ஊராட்சி 8வது வார்டில் சாக்கடை தோண்டிய இடத்தில் ஏற்பட்ட குழியை மூடக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2012–13ம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து சிலமலை ஊராட்சி 8–வது வார்டில் உள்ள சிலமலை மணியம்பட்டி சாலையில் ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் சாக்கடை கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தகாரர் திரு. மி. ஜெயராஜ், என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்படும். (ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், போடிநாயக்கனூர் அவர்களின் கடித எண் 116/2012/அ6, நாள்: 5–3–2013.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது..


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	398	நலைவர், நேரு இளைஞர் மன்றம், வடபுதுப்பட்டி, பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.	தேனி–பெரியகுளம் வழி வடபுதுப்பட்டி தடத்தில் பேருந்து சரிவர இயக்கப்படுவதில்லை என்றும் நேர்வழியில் சென்றுவிடுவதாலும், உரிய கால நேரத்திற்கு வடபுதுப்பட்டி வழியாக பேருந்து இயக்க வேண்டுதல் மற்றும் நேர்வழியாக செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளையும் வடபுதுப்பட்டி வழியாக இயக்க வேண்டுதல்.

துறையின் பரிந்துரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி–பெரியகுளம வழி வடபுதுப்பட்டி தடத்தில் அரசு போக்குவரத்துக் கழக திண்டுக்கல் மண்டலப் பேருந்துகள் மூலம் 32 தனிநடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நடைகளை உரிய கால நேரத்திற்கு வடபுதுப்பட்டி வழியாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும் தனியார் பேருந்தின் மூலம் 18 தனிநடைகள் தேனி–பெரியகுளம் வழி வடபுதுப்பட்டி தடத்திலும், தேனி–வடபுதுப்பட்டிக்கு தனியார் பேருந்தின் மூலம் 16 தனிநடைகளும், இது தவிர மினிப் பேருந்துகள் மூலமாகவும் 30 தனிநடைகள் வடப்புதுப்பட்டி வழியாக பயணிகள் விழுக்காட்டிற்கேற்ப இயங்கி வருவதை பயன்படுத்திக்கொள்ளலாம். நேர் வழியாகச் செல்கின்ற அனைத்து நகரப் பேருந்துகளையும் வடபுதுப்பட்டி வழியாக மாற்றி இயக்கும் பட்சத்தில் நேரிடைப் பயணிகளுக்கு கூடுதல் பயண நேரம், பயணக் கட்டணம் ஏற்படும் என்பதால் மிகவும் அசௌகர்யப்படுவார்கள், [பொதுமேலாளர், த.அபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடிதம் எண் வணிகம்/திவ/993, நாள் 23–9–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	409	திரு. எஸ். தங்கராஜ், கோத்தலூர்த்து (அஞ்சல்), ஆண்டிபட்டி.	கோத்தலூர்த்து ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோத்தலூர்த்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. [ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி அவர்களின் கடித எண் 45/2012/A6, நாள் 28–11–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	410	திரு. வே. காளிவேல், ஆட்சிமன்றக் குழு உறுப்பினர், நாகலாறு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், கோத்தலூர்த்து அஞ்சல், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.	அதிகாரிகுளம் கண்மாயில் உள்ள கருவேல் மரங்களை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, கோத்தலூத்து கிராமம், அதிகாரிகுளம் கண்மாயில் உள்ள கருவேல் மரங்களை, மாவட்ட வன அலுவலகத்திற்கு தகவல் கொடுத்து அவர்கள் மூலம் மரங்கள் மற்றும் முகடுகளையும் அகற்றப்பட்டன. [செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளம் அவர்களின் கடித எண் கோ.28/உசெபொ(தே)/2012, நாள் 13–12–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	420	திரு. பெ. வீராச்சாமி தலைவர், துல்லிய பண்ணை விவசாயம், சீலையம்பட்டி, சென்ட்ரல்பேங்க் மாடி, தேனி மாவட்டம்.	சீலையம்பட்டி மின்மாற்றிகள் SS II மற்றும் SS V பழுதடைந்து பல மாதங்கள் ஆனதை விரைவில் சரிசெய்ய வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேனி மாவட்டம், சின்னமனூர் நகர் பிரிவிற்கு உட்பட சீலையம்பட்டி கிராமத்தில் உள்ள மின்மாற்றிகள் SS II மற்றும் SS V தலா 100 கே.வி.ஏ ஆகிய இரண்டும் மின்பளு அதிகம் காரணமாக பழுதானதால் புதிய மின்மாற்றிகள் வைக்கப்பட்டு கூடுதல் மின்பளுவை தவிர்க்கும் பொருட்டு தற்காலிகமாக சிப்ட் (Shift) முறையில் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. பின்பு மேற்கண்ட இரு மின்மாற்றிகளில் உள்ள கூடுதல் மின்பளுக்களை பிரித்து புதிதாக மின்பளு மையமான வேப்பம்பட்டி ரோட்டில் புதிய மின்மாற்றி 18.11.2011 அன்று நிறுவப்பட்டு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. [மேற்பார்வை பொறியாளர், தே.மி.ப.வ/தேனி அவர்களின் கடித எண் 420/11, நாள் 21–7–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	438	திரு. கா. பாப்பையா, பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர், வீரமாக கல்வி குழு உறுப்பினர், இடைநிலை கல்வி குழு செயலாளர், த/பெ. காளியப்பன், வார்டு–3, காந்திநகர் பண்ணைப்புரம், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம்.	பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2011–2012ம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தில் கல்வித்துறையின் மூலமாக ரூ.5.88 லட்சம் மதிப்பீட்டில் அரசு மேல்நிலைப்பள்ளியை சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. (செயல் அலுவலர், பண்ணைப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	452	வி.எஸ். ஜமால் மைதீன், கழ்நிர் சேரமட்ட தியாகிகளின் வாரிகைகள் சங்க மாவட்ட அமைப்பாளர், தலைவர், ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம் கீழவடகரை 1வது வார்டு குடியிருப்போர் நல சங்க செயற்குழு உறுப்பினர் கீழவடகரை பெரியகுளம்.	பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் கீழவடகரை ஊராட்சி 1வது வார்டு போடாங்குளம் கண்மாயிலிருந்து மழை காலங்களில் வெளியேறும் உபரி நீரை கடத்துவதற்கு வடிகால் அமைத்துத் தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் கீழவடகரை ஊராட்சி 1வது வார்டில் அமைந்துள்ள போடாங்குளம் கண்மாய் பொதுப்பணித்துறையை சார்ந்ததாகும். மழைக்காலத்தில் கண்மாயிலிருந்து வரும் உபரி நீரை முறையாக கடந்துவதற்கு கண்மாயிலிருந்து கந்தர்வாஜ் நகர் வரை 345 மீட்டர் நீளமுள்ள வடிகால் கட்டுவதற்கு ரூ.10.60 லட்சம் மதிப்பீட்டில் செப்டம்பர் 2012ம் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் உபரி நீர் வடிகால் மூலம் வெளியேற்றப்பட்டு விடும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பெரியகுளம் அவர்களின் கடித எண் ந.க. எண். 3004/2012/அ3, நாள் 30-11-2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	488	தெரு பொதுமக்கள் 4வது வார்டு, பட்டாளம்மன் கோவில் தெரு, சின்னமனூர்.	சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2011–12ம் ஆண்டு SJSRY திட்டத்தின் கீழ் கூலிக்கு வேலை திட்டத்தின் கீழ் (UWEP & SJSRY) ரூ.3.50 லட்சம் செலவினத்திலும் பொது நிதியில் ரூ.3.97 லட்சம் செலவிலும் பட்டாளம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி முடிவற்றுள்ளது. [ஆணையர் சின்னமனூர் நகராட்சி அவர்களின் கடித எண். 4218–2011–இ1, நாள் 26–12–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	499	திரு. ஆ. ராமசாமி, சார்பு ஆய்வாளர் காவல் துறை (ஓய்வு) எ.புதுக்கோட்டை, பெரியகுளம்.	எ.புதுக்கோட்டை கலைஞர் காலனி கிராமத்தில் நவீன கழிப்பிடம் மீண்டும் புதுப்பித்து பயன்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் எண்டப்புளி ஊராட்சி கலைஞர் நகரில் உள்ள ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் 2011–12ம் நிதி ஆண்டில் ரூ.142000/–மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள மகளிர் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பெரியகுளம் அவர்களின் கடித எண் ந.க.எண்.3004/2012/அ3, நாள் 30–11–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)
9	867 •	திரு. பி. சந்திரன், அருந்ததியர் சமுதாய பொதுமக்கள், சில்லமரத்துப்பட்டி, தேனி.	அருள்மிகு பட்டாளம்மன் – காளியம்மன் – கருப்பச்சாமி கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
போடிவட்டம் சில்லமரத்துப்பட்டியிலுள்ள அருந்ததியர் சமுதாயத்திற்கு சொந்தமான அருள்மிகு பட்டாளம்மன் – காளியம்மன் – கருப்பச்சாமி கோவிலுக்கு மின்கழகத்தின் செலவில் இருபுதிய மின்கம்பம் அமைத்து புதிய மின்இணைப்பு (512 –010 –2092) 5.9.2011 அன்று வழங்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது. [மேற்பார்வை பொறியாளர், தே.மி.ப.வ/தேனி அவர்களின் கடித எண். கஎண்/உ.பொ/பகிர்வு/மேற்கு/போடி/வரை/அஎண். /12, நாள் 26–11–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	5560	திரு. ஜே. வேல்முருகன், அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி.	தேனி–அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிறுத்தத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரசு போக்குவரத்துக் கழக திண்டுக்கல் மண்டலப் பேருந்துகள் மூலம் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழியாக இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பாக நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றது. மேலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிறுத்தத்தில் நிரந்தரமாக ஒரு பணியாளரை நியமித்து அனைத்து பேருந்துகளையும் நிறுத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [பொது மேலாளர், தஅபோக (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம் அவர்களின் கடித எண் வணிகம்/திவ/669, நாள் 9–11–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS